# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படும் பயிலுநர் வானொலி இயக்குநர்களின் தேர்ச்சி சான்றிதழ்களுக்கான பரீட்சை (2024 மற்றும் 2025 வருடங்களுக்கானது)

**தேர்ச்சிச் சான்றிதழ் வகை :**

(அ) பயிலுநர் வானொலி இயக்குநர்களின் உயர் வகுப்பு தேர்ச்சி சான்றிதழ் ;

(ஆ) பயிலுநர் வானொலி இயக்குநர்களின் சாதாரண வகுப்பு தேர்ச்சி சான்றிதழ் ;

(இ) பயிலுநர் வானொலி இயக்குநர்களின் புதிய வகுப்பு தேர்ச்சி சான்றிதழ்.

இந்த தேர்ச்சி சான்றிதழுக்கான பரீட்சை ................................ நடாத்தப்படும்.

2. **நுழைவுக்கான ஆகக்குறைந்த தகைமைகள்**.- பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து அபேட்சகர்களும் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அபேட்சகர்களின் வயது பதினான்கு (14) அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

**கவனத்திற்கொள்க**: இந்தப் பரீட்சைக்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் தோற்றுவதாயின் அது தொடர்பில் விண்ணப்பத்தில் கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டும். ஏற்புடைய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

3. **பரீட்சை நடாத்தப்படும் மொழி மூலம்** : பரீட்சை ஆங்கில மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

4. **பரீட்சைத் திட்டம்** :

(அ) **உயர் வகுப்பு**.- பரீட்சை இரண்டு (02) பகுதிகளைக் கொண்டது.

I ஆவது பகுதி :
பரீட்சைக்குத் தோற்றும் ஒரு தடவையில் கட்டாய வினாப்பத்திரங்கள் இரண்டுக்கும் விடையளித்தல் வேண்டும்.

I. ஆம் வினாப்பத்திரம்: உயர் மின் தொழில்நுட்பம் மற்றும் வானொலி ஒலிபரப்பு (03 மணித்தியாலங்கள்) : (எழுத்துமூலப் பரீட்சை)

II. ஆம் வினாப்பத்திரம்: அனுமதிப்பத்திரம் வழங்கும் நிபந்தனைகள், செயற்படுத்தல் பரீட்சயம் மற்றும் நடவடிக்கை முறை (02 மணித்தியாலங்கள்) (பல்தேர்வு வினாப் பத்திரம்)

2 ஆம் பகுதி :
செயல்முறை மோஸ் சமிக்ஞை பரீட்சை (நிமிடத்திற்கு 05 சொற்கள்)

(ஆ) **சாதாரண வகுப்பு** - ஒரு தடவையில் கட்டாய வினாப்பத்திரங்கள் இரண்டுக்கும் விடையளித்தல் வேண்டும்.

I. ஆம் வினாப்பத்திரம்.- வானொலி ஒலிபரப்பு மற்றும் மின் தொழில்நுட்பம் அடிப்படை அம்சங்கள் (02 மணித்தியாலங்கள்) (பல்தேர்வு வினாப்பத்திரம்)

II. ஆவது வினாப்பத்திரம்.- அனுமதிப்பத்திரம் வழங்கும் நிபந்தனைகள், செயற்படுத்தல் பரீட்சயம் மற்றும் நடவடிக்கை முறை (01 மணித்தியாலம்) (பல்தேர்வு வினாப்பத்திரம்)

(இ) **புதிய வகுப்பு**

I. ஆம் வினாப்பத்திரம்.- அடிப்படை மின் தொழில் நுட்பம் மற்றும் வானொலி மற்றும் மின்னியல் கோட்பாடுகள் (02 மணித்தியாலங்கள்) (பல்தேர்வு வினாப்பத்திரம்)

II. ஆம் வினாப்பத்திரம்.- அனுமதிப்பத்திரம் வழங்கும் நிபந்தனைகள், செயற்படுத்தல் பரீட்சயம் மற்றும் நடவடிக்கை முறை (01 மணித்தியாலம்) (பல்தேர்வு வினாப்பத்திரம்)

பாடத்திட்டத்தை இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் அல்லது நிறுவனத்தின் இணையப் பக்கத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

5. **பரீட்சையின் நிபந்தனைகள்**: அனைத்து வகைகளினதும் தேர்வுச் சான்றிதழ்கள் தொடர்பிலும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

(i) அபேட்சகர்கள் பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சையின் அனைத்து பகுதிகளிலும் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகளின் சராசரி வினாப்பத்திரத்தில் 50% புள்ளிகள் ஆகும் ;

(ii) உயர் வகுப்புக்கான பரீட்சையின் போது 1 ஆவது பகுதியை ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும்;

(iii) உயர் வகுப்புக்கான பரீட்சையில் 1 ஆவது பகுதியில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் அந்த வகுப்பின் 2 ஆம் பகுதிக்கு தோற்றுவதற்கு (மோஸ் பரீட்சைக்கு) இடமளிக்கப்படும்.

*6.* **பரீட்சைக் கட்டணம்:**

*(அ)* **பரீட்சைக் கட்டணம்:** *(பரீட்சைத் திணைக்களத்தின் கட்டணம்) : பரீட்சைக் கட்டணம் ரூபா அறுநூறு (ரூ. 600.00) ஆகும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13* எனும் வருமானத் தலைப்புக்கு வரவு வைக்கும் வகையில், தீவின் எந்தவொரு தபால் அலுவலகம்/ மாவட்ட/ பிரதேச செயலகத்தில் பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூண்டில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் சார்பில் காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

(க.கொ. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்ப தாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.)

(ஆ) பரீட்சைக் கட்டணம் (இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கட்டணம்) (இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பெயரில் காசாக/கடன் அட்டைகள்/வரவு அட்டைகள் (கிரடிட் அட்டை/ டெபிட் அட்டை) வீசா/ மாஸ்டர் எந்தவொரு வங்கிக் கட்டளை மூலம் செலுத்தப்படல் வேண்டும்.

நுழைவுக்கான விண்ணப்பங்களை பட்டியலிட்டு ஒப்படைப்பதன் மூலமோ அல்லது நேரடியாக ஒப்படைக்கவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்புதல் வேண்டும். நுழைவுக்கான விண்ணப்பத்தை தபாலுக்கு ஒப்படைத்தல் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் பற்றிய சான்றை முன்வைத்தால் மாத்திரம் அன்றி தபால் செய்யப்பட்டதாக அல்லது ஒப்படைக்கப்பட்டதாக கோரும் உரிமை இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. எனவே பணம் செலுத்திய உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாது என்பதுடன், பின்னர் நடாத்தப்படும் வேறு பரீட்சையொன்றுக்கு மாற்ற முடியாது. விண்ணப்பத்தை கேட்டு அகற்றிக்கொள்ளுமிடத்து அல்லது ஏதேனுமொரு காரணத்தினால் பரீட்சையில் தோற்ற முடியாமல் போகும் போது பின்னர் நடாத்தப்படும் உரிய பரீட்சைக்குரிய கட்டணத்தை மீளச் செலுத்துதல் வேண்டும்.

| *பரீட்சையின் வகை* | *1 ஆம் பகுதிக்கான கட்டணம் (ரூபா ச.)* | *2 ஆவது பகுதிக்கான கட்டணம் (ரூபா ச.)* |
|---|---|---|
| உயர் வகுப்பு | 280.00 | 140.00 |
| சாதாரண வகுப்பு | 140.00 | - |
| புதிய வகுப்பு | 140.00 | - |

**குறிப்பு**.- *அரசாங்கத்தின் தற்போதைய அனைத்து வரிகள் மற்றும் கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.*

7. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதனை அறிவிக்கும் வகையில், பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமும் அறிவிக்கப்படும்.

அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு (02) அல்லது மூன்று (03) நாட்கள் கடந்ததன் பின்பும் தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்காவிட்டால், அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை பரீட்சைகள் திணைக் களத்தின் ஒழுங்கமைப்புப் பிரிவுக்கு அதனை அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தை கொண்டவராக இருப்பின், தொலைநகல் Fax மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்சொன்ன விபரங்களுடன் தொலைநகல் Fax இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் Fax இலக்கத்தினூடாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படுகின்ற ஏதேனும் விபரமொன்றை உறுதிப்படுத்தும் வகையில், விண்ணப்பதாரி ஏற்கனவே தம் வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

## கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

ஆங்கிலப் பாடத்துடன் கூடிய பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/கலைமாணி (வெளிவாரி) முதல் பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களை அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்தல் – 2023/2024 கல்வி வருடம்

2023/2024 ஆம் கல்வி வருடத்தில் ஆரம்பமாகும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்காக இலங்கை அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு ஆங்கிலப் பாடத்துடன் கூடிய பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/ கலைமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்த அரசாங்க அல்லது அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

(i) கலைப் பட்டப் பாடநெறி (ஆங்கிலப் பாடத்துடன் கூடிய)
(ii) விஞ்ஞானமானிப் பட்டப் பாடநெறி (உயிரியல் /பௌதீகவியல் /பிரயோகவியல் விஞ்ஞானம்)

02. விண்ணப்பதாரர்கள் இதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) (அ) கலைப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு,
2019 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னரான வருடமொன்றில் ஆங்கிலப் பாடத்துடன் கூடிய, பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/கலைமானி (வெளிவாரி) முதலாவது பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) உயிரியல், பௌதீகவியல் அல்லது பிரயோகவியல் விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு,
2019 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு பின்னராக நடாத்தப்பட்ட விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு ஆசிரியராக 05 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், உரிய ஆசிரியர் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றில், தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றில், பல்கலைக்கழகமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப் பாடநெறி ஒன்றைத் தொடர்வதற்காக பதிவு செய்யாதவராக இருத்தல்.

(iv) ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் உள்ள உயிரியல், பௌதிகவியல் அல்லது பிரயோகவியல் விஞ்ஞானப் பாடநெறி தொடர்பில், உரிய பாடநெறிக்கு தகுதி பெறுவதற்காக க.பொ.த (உயர் தர) பரீட்சையில் அல்லது விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் உரிய பல்கலைக்கழகத்தினால் அடிப்படைத் தேவையாகக் கருதப்படும் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(v) முழு நேர சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய ஆசிரியர் ஒருவராக இருத்தல்.

03. அரசாங்க ஆசிரியர்களது விண்ணப்பப்படிவங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளராலும், அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களது விண்ணப்பப்படிவங்கள் உரிய அதிபர்/ முகாமையாளரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

04. அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களது அனுமதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் குறித்த பாடசாலையின் அதிபரால்/ முகாமையாளரால் அவ் ஆசிரியருக்கு கற்கை விடுமுறை வழங்க அனுமதிக்க முடியும்/அனுமதிக்க முடியாது என்பதாக விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

05. அனைத்து விண்ணப்பப்படிவங்களும் இதில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இரண்டு (02) பிரதிகள் சகிதம் 2024.10.25 ஆந் திகதிக்கு முன்னர் “கல்விப் பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல” எனும் முகவரிக்கு கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் 2023/ 2024 (ஆசிரியர்களுக்குரியது)” என்பதாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

06. இந்த அணுகுமுறையின் கீழ் ஆங்கிலப் பாடத்துடன் கூடிய பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில்/ கலைமாணி (வெளிவாரி) முதலாவது பரீட்சையில் அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள், உரிய பாடத்திற்கு பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

07. சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை பெற்றுக்கொள்வதற்குரிய உரித்து தொடர்பில் நேர்முகப் பரீட்சையின் போது விசாரிக்கப்படும்.

08. பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவது தொடர்பில் இந்த அமைச்சு கட்டுப்படவில்லை.

விண்ணப்பப்படிவம் மூன்று மொழிகளிலும் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் (www.moe.gov.lk) விசேட அறிவித்தல்கள் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

09. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது பொருத்தப்பாடின்மை காணப்படும் பட்சத்தில் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைய நடவடிக்கையெடுக்கப்படும்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர,
செயலாளர்,
கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு.

10-44

